# 12

# "இறுதி தீர்ப்பு"

## [3:9–20]

*ரோமருக்கு எழுதிய நிருபத்தின் மையக்கருத்தினுடைய முதல் பகுதியின் முடிவிற்கு நாம் வந்திருக்கிறோம். இந்தப் பகுதி முழுவதிலும், பவுல் சட்டப்பூர்வமான சொல்வழக்குகளைப் பயன்படுத்தியிருக்கிறார். உதாரணமாக, 2:15ல் அவர் "அவர்களுடைய மனச்சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும்" என்று புறஜாதியாரைப்பற்றிப் பேசினார். இந்தப்பாடத்திற்கான வசனப்பகுதியில், பவுல் மீண்டும், கற்பனை விசாரணையைப்பயன்படுத்தினார். எடுத்துக்காட்டாக, அவர், "யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்களென்பதை முன்பு திருஷ்டாந்தப்படுத்தினோமே" என்று கூறினார் (வசனம் 9ஆ). லியோன் மோரிஸ் என்பவர், "[வசனம் 9ல் உள்ள] மொழிநடையானது, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் இந்தப்பகுதியின் பெரும்பான்மையில் சட்டப்பூர்வமானதாக உள்ளது" என்று உற்று நோக்கினார்.[1]* REB *வேதாகமத்தில், "யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்தின் அதிகாரத்தின் கீழ் உள்ளனர் என்ற குற்றச்சாட்டை நாம் ஏற்கனவே தரவழைத்துள்ளோம்" என்றுள்ளது. 1:18ல் தொடங்கிய "விசாரணை" ஒரு முடிவுக்கு வருகிறது. இது "இறுதித் தீர்ப்பு"க்கான வேளையாக உள்ளது.*

## இறுதி தர்க்க அடிப்படை (3:9)

*3:1ல் பின்வரும் கேள்வி கேட்கப்பட்டது: "இப்படியானால் யூதனுடைய மேன்மை என்ன?" இதற்குப் பவுல், "அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது" என்று பதில் அளித்தார் (வசனம் 2அ). இப்போது அதேபோன்று இன்னொரு கேள்வி கேட்கப்படுகிறது:[2] "ஆனாலும் என்ன? அவர்களைப் பார்க்கிலும் [யூதர்களாகிய] நாங்கள் விசேஷித்தவர்களா?" (வசனம் 9அ).* RSV *வேதாகமத்தில்,* "Are we Jews[3] any better off [that is, better off than the Gentiles]?" *என்றுள்ளது. இவ்வேளையில் பவுல், "எவ்வளவேனும் விசேஷித்தவர்களல்ல" என்று பதில் அளித்தார் (வசனம் 9ஆ). பதிலில் ஏன் இந்த வேறுபாடு? ஏனென்றால், அவைகள் ஒன்றுபோல் இருந்தாலும், கேள்விகள் ஒன்றுபோல் இருப்பதில்லை.*

- *யூதர், புறஜாதியாரைப் பார்க்கிலும் மேன்மையைக் கொண்டிருந்தாரா? ஆம், ஏனென்றால் எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தை அவர் கொண்டிருந்தார் (வசனம்*

2ஆ).

- அவர் அதைத் தனது மேன்மைக்குப் பயன்படுத்தினாரா? *இல்லை,* ஏனெனில் அவர் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தவறியிருந்தார் (2:13, 23, 25 ஆகியவற்றைக் காணவும்).
- அப்படியானால் அவர் (யூதர்), எழுதப்பட்ட நியாயப்பிரமாணம் எதையும் தேவன் தந்திராத புறஜாதியாரைப் பார்க்கிலும் மேன்மையானவரா? *இல்லை.*

1:18-32ல், பவுல் புறஜாதியார் [யூதரல்லாதவர்கள், அல்லது கிரேக்கர்கள்] தங்களுக்குக் கிடைத்திருந்த பிரமாணத்தைக் கைக்கொள்ளா திருந்தனர் என்று நிலைநாட்டியிருந்தார். 2:1-3:8ல், அவர் யூதர்களைப் பொறுத்தமட்டிலும்கூட இவ்வாறே முடிவுசெய்தார். இப்போது அவர், "யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்களென்பதை முன்பு [1:18 முதல் இவ்வசனம் வரையிலும்] திருஷ்டாந்தப்படுத்தினோமே" என்று உரைத்தார் (வசனம் 9இ). "முன்பு திருஷ்டாந்தப்படுத்தினோமே" என்ற வார்த்தைகள், "குற்றம்சுமத்துதல் அல்லது குற்றம்சாட்டுதல்" என்பதற்கான (*aitiaomai* என்ற) வார்த்தையுடன் "முன்னால்" என்று அர்த்தப்படுகிற (*pro* என்ற) வார்த்தையை ஒன்றுகூட்டிய *proaitiaomai* என்பதில் இருந்து வருகின்றன.[4] இவ்வார்த்தை "தரப்பட்ட ஒரு குற்றத்திற்கு முன்னதாகவே தீர்ப்பிடப்பட்ட ஒரு நபரைக்குறிப்பதற்கான சட்டப்பூர்வமான சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டது."[5]

என்ன "குற்றம்"? பாவம். 1:18ல் இருந்தே பவுலின் கலந்துரையாடல், மனிதகுலத்தின் பாவம் நிறைந்த தன்மையைப் பற்றியதாகவே இருந்தது, ஆனால் இதுதான் "பாவம்" என்ற வார்த்தை முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்ட இடமாகும். அவர், (3:23ல் போன்று) "எல்லாரும் பாவம் செய்து" என்று மாத்திரம் கூறவில்லை, ஆனால் எல்லாரும் "*பாவத்தின்கீழ்*" இருக்கிறோம் என்று கூறினார். "கீழ்" என்பது *hupo* என்ற முன்னிடைச் சொல்லின் மொழிபெயர்ப்பாக உள்ளது. *Hupo* என்பது "ஆதிக்கம் செய்யப்படுதல் அல்லது *அதிகாரத்தின் கீழிருத்தல்*" என்ற கருத்தில் பயன்படுத்தப்படக்கூடும்[6] (மத்தேயு 8:9; கலாத்தியர் 3:25; 1 தீமோத்தேயு 6:1 ஆகியவற்றைக் காணவும்). ரோமர் 3:9, RSV வேதாகத்தில் "under the power of sin" என்றுள்ளது. AB வேதாகமத்தில் "held down by and subject to its power and control" என்றுள்ளது.

"பாவம்" என்பது கொடுமையான எஜமான் என்ற வகையில் நபர்த்துவப்படுத்தப்பட்டுள்ளது. நாம் "பாவத்தின் அதிகாரத்தின் கீழாக" *பிறக்கவில்லை;* ஆனால் தனிப்பட்ட பாவங்களைச் செய்யப்போதுமான அளவு வயது வந்தபோது *பாவத்திற்கு அடிமைகளானோம்* (ரோமர் 6ஐக் காணவும்). நாம் காணப்போகிறபடி, கிறிஸ்துவின் இரத்தம் ஒன்றுதான் விடுதலைக்கான நமது ஒரே நம்பிக்கையாக உள்ளது.

# இறுதி நிரூபணம் (3:10-19)

பவுல் தமது தர்க்கக் கருத்தை உரைத்திருந்தார்: யூதர்களும் புறஜாதிகளும் ஆகிய இருசாராருமே பாவத்தின்கீழ் இருந்தனர் மற்றும் அவர்களுக்கு தேவனுடைய நீதி தேவையாயிருந்தது. இருப்பினும், அந்தக்குழுக்களில் ஒன்று - யூதர்கள் - அந்தத்தீர்ப்பை எதிர்த்து நின்று முடிவான நிரூபணத்தை வற்புறுத்திக்கேட்பார்கள் என்று பவுல் அறிந்திருந்தார். இவ்விதமாக அவர், அவர்கள் மேன்மைபாராட்டிக்கொண்டிருந்த நியாயப்பிரமாணத்திற்குத் திரும்பினார் (2:23ஐக் காணவும்). அவர் "As it is written" (3:10அ) என்று தொடங்கினார். [தமிழில் இது 18ம் வசனத்தில் "என்று எழுதியிருக்கிறதே" என முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.]

**வசனப்பகுதிகள்**

10 முதல் 18 வரையுள்ள வசனங்களில், பவுல் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் குறைந்தபட்சம் இரண்டில் இருந்து, ஒன்பது வசனங்களை மேற்கோள் காண்பித்தார்: சங்கீதங்கள் மற்றும் ஏசாயா.[7] வேதாகமம் எழுதப்பட்டுக்கொண்டிருந்த காலங்களில், அவர் மேற்கொண்ட அணுகுறையானது, "முத்துக்களை ஒன்றாகக் கோர்த்தல்" என்று அர்த்தப்படுகிற *charaz* என்று அழைக்கப்பட்டது.[8] இன்றைய நாட்களில், நாம் இதை "நிரூபண வசனங்களின்" கோர்வை என்று குறிப்பிடலாம் (9:25-27; 10:18-21; 11:8-10; 15:9-12ஐக் காணவும்), ஆனால் இது இந்த நிருபத்தில் உள்ள பழைய ஏற்பாட்டு வசனங்களின் மிகவும் நீளமான வரிசைத்தொடராகும். உண்மையில், இது புதிய ஏற்பாட்டில் உள்ள இப்படிப்பட்ட வரிசைத்தொடர்களிலேயே மிகவும் நீளமானதாகும்.

பவுல், தமது வழக்கப்படி பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பில் இருந்து மேற்கோள் காண்பித்தார். முதலில் அவர் சங்கீதம் 14:1-3ல்[9] இருந்து மேற்கோள் காண்பித்தார், இதில் அவர் மனிதகுலத்தின் *கலகம் செய்யும் சூழ்நிலை*[10] பற்றிக்குறிப்பிட்டார்: "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க்கெட்டுப்போனார்கள்; நன்மைச்செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10-12). "நீதிமான்" என்பது இவ்விடத்தில், "தேவனுடன் சரியான உறவுமுறையில் நிற்குதல்" என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கணக்கு ஒப்புவிக்க வேண்டிய மக்கள் யாவரும் *சரியானவைகளாக* இருக்கிற சில விஷயங்களைச் செய்கின்றனர், ஆனால் அவர்கள் *தவறானவைகளாக* இருக்கிற சில விஷயங்களையும் செய்கின்றனர். இதன் விளைவாக, அவர்கள் தேவனுக்கு முன்பாக ஆக்கினைத்தீர்ப்பு அடையும் நிலையில் நிற்கின்றனர் (யாக்கோபு 2:10ஐக் காணவும்).

விஷயம் ஏன் இவ்வாறு இருக்கிறது? இந்தச் சூழ்நிலையை, அழுக்கும் நீரும் கொண்டுள்ள ஒரு பாத்திரத்தைக்கொண்டு விவரிக்கலாம். அந்த அழுக்கில் சிறிது சுத்த நீரை ஊற்றுங்கள். அந்தத் தண்ணீர் அந்த அழுக்கை சுத்தம் செய்கிறதா? இல்லை. இப்போது தண்ணீருக்குள் கொஞ்சம் அழுக்கை சேருங்கள். அந்த அழுக்கானது தண்ணீரை அழுக்காக்குகிறதா?

*நிச்சயமாக. பாவமும் இதைப் போன்றதாவே உள்ளது: உங்கள் வாழ்வில் எவ்வளவு நன்மை இருப்பினும் அது ஒரு பொருட்டல்ல, அங்கு இன்னமும் சில மோசமானவை உள்ளன - அது உங்களைப் பாவியாக்குகிறது (யாக்கோபு 2:10ஐக் காணவும்). இதற்கு விதிவிலக்குகள் உண்டா?*[11] *சங்கீதக்காரர் அதிகம் தெளிவாக இருக்கக்கூடாதிருந்தது. அவரை மேற்கோள் காண்பித்த பவுல், "... ஒருவனும் இல்லை ... ஒருவனாகிலும் இல்லை ... ஒருவனும் இல்லை ... ஒருவனும் இல்லை ... ஒருவனும் இல்லை ... ஒருவனாகிலும் இல்லை" என்று கூறினார்!*

*சங்கீதம் 14ன் ஆக்கினைத்தீர்ப்புப் போர்வை தங்களுக்கு நடைமுறைப்படாது என்று மறுப்பதில் இருந்து எவரொருவரையும் தடைசெய்வதற்காகப் பவுல் பின்பு பாவங்களின் மிகப் பொதுவான வகையைக் குறிப்பிட்டார்: நாவின் பாவம். மனிதகுலத்தின் விரும்பத்தகாத உரையாடலின்மீது அவர், சங்கீதங்களில் இருந்து மூன்று வசனப்பகுதிகளை மேற்கோள் காண்பித்தார்: "அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி, தங்கள் நாவுகளால் வஞ்சனை செய்கிறார்கள்" (ரோமர் 3:13அ; சங்கீதம் 5:9ஐக் காணவும்); "அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது" (ரோமர் 3:13ஆ; சங்கீதம்140:3ஐ காணவும்); "அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது" (ரோமர் 3:14ஆ; சங்கீதம் 10:7ஐ காணவும்). வரைவளையான இவ்வசனங்களைப் பற்றி விபரமாய்க் காண்பதற்கு, இப்புத்தகத்தினுடைய இடக் கட்டுப்பாடு நம்மை அனுமதிக்காது. ஏதாவது ஒரு வேளையில் தமது நாவினால் பாவம் செய்துள்ளதை எவரொருவராவது மறுக்க முடியுமா? என்று மாத்திரம் நான் எளிமையாகக் கேட்கிறேன். நாவை "அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது" என்று அழைத்த யாக்கோபுடன், நிச்சயமாக நாம் அனைவருமே ஒருமித்தாக வேண்டும் (யாக்கோபு 3:8).*

*அநீதியானவர்கள் பாவத்தின் எந்த ஆழங்கள் வரையிலும் போக முடியும்? ஏசாயா 59:7, 8ல் இருந்து மேற்கோள் காண்பித்து பவுல், மனித குலத்தின் விளைவான நடக்கைக்குத் திரும்பினார்: "அவர்கள் கால்கள் இரத்தஞ்சிந்துகிறதற்குத் தீவிரிக்கிறது; நாசமும் நிர்பந்தமும் அவர்கள் வழிகளிலிருக்கிறது; சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்" (ரோமர் 3:15-17). ரிச்சர்டு ரோஜர்ஸ் என்பவர், 13 மற்றும் 14ம் வசனங்களில் உள்ள "தொண்டை," "நாவுகள்," "உதடுகள்," மற்றும் "வாய்" ஆகியவற்றையும் 15ம் வசனத்தில் உள்ள "கால்கள்" என்பதையும் குறிப்பிட்டார். பின்பு அவர், மனிதகுலமானது "தலைமுதல் கால்வரை" சாவுக்கேதுவான வியாதிப்பட்டிருப்பதாக உற்றுநோக்கினார்.*[12]

*பவுல், வசனப்பகுதிகளின் தமது வரிசைத் தொடரை, சங்கீதம் 36:1ல் இருந்து மேற்கோள் காண்பித்து முடித்தார்: "அவர்கள் கண்களுக்கு முன்பாக தெய்வபயமில்லை" (ரோமர் 3:18). "பயம்" (phobos) என்பது ஆழமான மரியாதை மற்றும் பக்தியைக் குறிக்கிறது. தேவனை மதிக்கத் தவறுதல் என்பது எல்லாப் பாவத்திற்கும் இருதயம் போன்ற மையப்பகுதியாகும். தேவனை மதிக்காதவர் மற்றவர்களை மதிக்கமாட்டார்; அவர்*

தம்மைத்தாமேகூட மதிக்கமாட்டார்.

சிலர், ''முற்றிலுமான அழிவைச் சுதந்திரித்துக் கொள்ளுதல்'' என்ற உபதேசத்தை நிரூபிக்க ரோமர் 3:9-18ஐப் பயன்படுத்த முயற்சி செய்கின்றனர்: இது, பிள்ளைகள் பிறக்கும்போது அவர்களின் ஆத்துமாக்கள், ஆதாமின் பாவத்தினால் பாரம்சுமந்த நிலையில் இருக்கின்றன என்ற போதனையாகும். இந்த உபதேசரீதியான தவறினை நாம் 5ம் அதிகாரத்தை அடையும்போது கலந்துரையாடுவோம், ஆனால் இந்த வேளையில் இரண்டு உற்றுக்கவனித்தல்கள் முறையானதாக உள்ளன. முதலாவது, வேதாகமம் பொதுவில் இந்த உபதேசத்தைப் போதிப்பதில்லை. பிள்ளைகள் தூய்மையாகவும் பரிசுத்தமாகவும் பிறக்கின்றன (மத்தேயு 18:3ஐக் காணவும்); ஒவ்வொரு நபரும் அவர் அல்லது அவள் செய்த பாவத்திற்குத்தான் பொறுப்பாகிறாரே தவிர, ஆதாமின் பாவத்திற்குப் பொறுப்பாவது இல்லை (எசேக்கியேல் 18:2ஐக் காணவும்). இரண்டாவது, ரோமர் 3:9-18ல் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ள வசனப்பகுதிகள் இந்த உபதேசத்தைப்போதிப்பதில்லை. பழைய ஏற்பாட்டு குறிப்புகளை ஆய்வுசெய்து பாருங்கள், அப்போது நீங்கள், அவை ஒவ்வொன்றும் குழந்தைகளையல்ல, ஆனால் பொறுப்புள்ள தனிநபர்களைப் பற்றியே பேசுகின்றன என்பதைக் காண்பீர்கள்.

**நோக்கம்**

பவுல், யூதர்களிடத்தில் இருந்து ஒரு பதிலுரையை எதிர்பார்த்தார். சங்கீதங்கள் மற்றும் ஏசாயா புத்தகம் ஆகியவற்றின் பெரும்பான்மை யான வசனங்கள், தோற்றத்தில் புறஜாதியார் அல்லது இஸ்ரவேல் மக்களில் விசுவாசமற்ற பிரிவினரை நோக்கியே செயல்படுத்தப்பட்டன. அடுத்ததாகப் பவுல், ''நியாயப்பிரமாணம்[13] சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்'' என்பதைக் கூடுதலாகக் கூறினார் (3:19ஆ). அவரது விவாதத்தைப் பின்வருமாறு உரைக்கலாம்: நியாயப்பிரமாணத்தில் உள்ள குறிப்பிட்ட சில வசனப்பகுதிகள் மற்றவர்களை நோக்கிச் செயல்படுத்தப்பட்டன, ஆனால் தேவன் நியாயப்பிரமாணத்தை *யூதர்களுக்கே* கொடுத்தார். நியாயப்பிரமாணத்தில் தேவன் எவற்றையெல் லாம் உள்ளடக்கினாரோ, அவற்றை யூதர்கள் *தங்களுக்குத் தாங்களே* நடைமுறைப்படுத்தவேண்டும் என்று அவர் நோக்கங்கொண்டார். இவ்விதமாக, இறுதி ஆராய்வில், நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு விஷயமும் "நியாயப்பிரமாணத்தின் கீழ்" இருப்பவர்களுக்கே கூறப்பட்டது.

நியாயப்பிரமாணம் தனது அதிகாரத்தின்கீழ்[14] இருப்பவர்களுக்கு, "வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும்" என்று பேசிற்று (வசனம் 19அ). யூதர்களின் "வாயே" கடைசியாக "அடைக்கப்பட" வேண்டிய வாயாக இருந்தது. அது நிறைவேற்றப்பட்ட உடனேயே, "உலகத்தார் யாவரும்" (யூதர்களும் புறஜாதியார்களும்) தாங்கள் "தேவ

னுக்குக் கணக்கொப்புவிக்க" வேண்டியதை உணர்ந்தறிவார்கள் (ரோமர் 14:12).

மீண்டுமாக, நீதிமன்ற அறை என்ற ஒப்புவமை பயன்படுத்தப் பட்டுள்ளது. "அடைக்கப்பட்ட வாய் என்பது பற்றிய குறிப்பு, நீதிமன் றத்தில் பிரதிவாதியின் உருவத்தை [நமக்குள்] உருவாக்கத் தூண்டுகிறது, அவர் தமது தரப்பைப் பற்றி தற்காப்பு வாதம் செய்யும்படி பேச, அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும்போது, அமைதியாக நிலைநின்று, தமக்கு எதிராக உள்ள சாட்சியத்தின் சுமையினால் மூழ்கடிக்கப்படுகிறார்."[15] NEB வேதாகமம், "no one [will] have anything to say in self-defense" ("எவரொருவரும் தற்காப்பு வாதமாகக் கூற எதையும் கொண்டிருக்க மாட்டார்கள்") என்று கூறுகிறது.

## இறுதி கொள்கை (3:20)

யூதர்களின் "வாயை அடைப்பதற்கு" பவுல் இன்னும் ஒரு விஷயத்தைக் கூறவேண்டியிருந்தது. செயல்விளைவில் அவர் அப்போதுதான், நியாயப்பிரமாணம் அவர்களை ஆக்கினைக்குள்ளாக்கியிருந்ததென்று கூறியிருந்தார். இது அவர்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கடினமானதாக இருந்தது. அவர்கள், தேவன் தங்களிடத்தில் நியாயப்பிரமாணத்தை ஒப்புவித்திருந்ததே தங்கள் இரட்சிப்பிற்கான உறுதிப்பாடு என்று நம்பியிருந்தனர். வளமான அந்த நம்பிக்கைக்குப் பவுலின் பதிலுரையானது, "ஆக்கினைத்தீர்ப்பு" என்பதன்மீதான பகுதியின் முடிவுரையாகவும் "நீதிமானாக் கப்படுதல்" என்ற அடுத்த பகுதிக்குப் பாலமாகவும் உதவியது. (கீழ் உள்ள வரைகுறிப்பை மறுகண்ணோட்டமிடவும்)

20ம் வசனம், ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் புரிந்துகொள்ள இன்றியமையாத ஒரு கொள்கையை நிலைநாட்டுகிறது: "எந்த மனுஷனும் [flesh][16] நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." கிரேக்க வசனமானது நேரடியான அர்த்தத்தில், "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால்" எந்த மனுஷனும் நீதிமானாக்கப் படுவதில்லை என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. NASB உட்படப் பல மொழிபெயர்ப்புகள், "நியாயப்பிரமாணம்" (அல்லது அதைப்போன்ற ஒரு சொற்றொடரை) கொண்டுள்ளன, ஏனென்றால் பவுல், முன்னெதிர் நோக்கப்பட்ட யூதத்துவ மறுப்புரை ஒன்றுக்குப் பதிலளித்தார் மற்றும் அவர் தமது சிந்தையில் முதன்மையாக, மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்தார். அதேவேளையில் பவுலும் ஒரு வலிவார்ந்த சத்தியத்தை அறிமுகப்படுத்தினார் என்பதையும் நாம் மறுக்கக் கூடாது: எவரொருவரும் *எந்தப்* பிரமாணத்தின் கிரியைகளினாலும் நீதிமானாக்கப்பட முடியாது.

அது ஏன்? தொடர்ந்து பவுல், "பாவத்தை அறிகிற அறிவு[17] நியாயப்பிரமாணத்தினால்[18] வருகிறபடியால்" என்று கூறினார் (வசனம் 20அ). தெய்வீகமான நியாயப்பிரமாணம் பாவத்தைப் பற்றிய அறிவை உண்டாக்குகிறபடியால், அது நம்மைப் பாவிகள் என்று வெளியாக்குகிறது. D. மார்ட்டின் லாயிட்-ஜோன்ஸ் என்பவர், "மிகச்சிறந்த மனிதரை, மிகவும் மாண்புடையவரை, மிகவும் கற்றறிந்தவரை, மிகவும்

[உதாரகுணம் உடையவரை]; மிகச்சிறந்த கொள்கைவாதியை, மாபெரும் சிந்தனையாளரை எடுத்துக்கொண்டு, அவரைப்பற்றி நீங்கள் விரும்புகிற எதையும் கூறுங்கள் - நியாயப்பிரமாணத்தின் பரீட்சைக்கு நிற்கக்கூடிய ஒரு மனிதர் என்றைக்கும் இருந்ததில்லை. உங்கள் தூக்குநூலைத்[19] தாழவிடுங்கள், அவர் அதற்கு உண்மையுள்ளவராக இருப்பதில்லை" என்று எழுதினார்.[20] பிலிப்ஸ் மொழிபெயர்ப்பு வேதாகமம் இதேபோன்றதொரு ஒப்புவமையைப் பயன்படுத்துகிறது: "It is the straightedge of the Law that shows us how crooked we are."

இந்த சத்தியத்தைப் பவுல் 7ம் அதிகாரத்தில் விரித்துரைத்தார், ஆனால் இப்பொழுது நான், இந்தக் கொள்கையின் ஒரு அம்சத்தை வலியுறுத்த விரும்புகிறேன்: நியாயப்பிரமாணத்தில் - அல்லது எந்த ஒரு பிரமாணத்தின் - நோக்கம் என்பது தவறான செய்கையை வெளிப்படுத்துதல்தானே தவிர, *தவறான செய்கைக்குச்* சாக்குப்போக்குக் கூறுவதல்ல.[21] உதாரணமாக, நெடுஞ்சாலை [வாகனங்களின்] வேகம்பற்றிய சட்டங்களை எடுத்துக் கொள்ளுங்கள். நான் எனது கார் வாகனத்தை ஓட்டுகையில் எனது கவனம் எங்கோ அலைகிறது. எனது வானத்தின் வேகம், மாநில சட்டங்களினால் விதிக்கப்பட்ட வரையறையை மீறுகிறது என்று வைத்துக்கொள்வோம். காவலர் ஒருவர் என்னை நிறுத்துகிறார். "நீங்கள், 55மைல் வேகத்தில் செல்ல வேண்டிய சாலையில் 65 மைல் வேகத்தில் பயணம் செல்கிறீர்கள்" என்று அவர் அறிவிக்கிறார். அதற்கு நான், "அது சரிதான், இந்தப் பயணத்தின் முதல் ஐம்பத்தைந்து மைல்கள் நான் வேக வரையறைக்குக் கீழாக இருந்தேன். இந்தத் தவறுக்கு அது சரியாகப் போய்விட்டது" என்று பதில் அளிக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். அந்தக் காவலருடைய பதில்செயல் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் சிரித்து, சிரிப்பதை நிறுத்தியபின்பு, பெரியதொகை ஒன்றைச் செலுத்தும்படிக்கு, மீறுதலுக்கான சீட்டை எழுதுவார் என்பதில் சந்தேகம் இல்லை.

யாக்கோபு வசனத்தை ஒரு கண்ணாடிக்கு ஒப்பிட்டு, மாறுட்ட ஒப்புவமை ஒன்றைப் பயன்படுத்தினார் (யாக்கோபு 1:23). ஒரு கண்ணாடியானது எனது கன்னத்தில் ஒரு அழுக்குக்கறை உள்ளதென்று காண்பிக்க முடியும், ஆனால் அது அந்த அழுக்குக்கறையை நீக்க முடியாது. அதுபோவே, ரோஜர்ஸ் என்பவர் கூறுகிறபடி, "நியாயப்பிரமாணம் ஒளியூட்ட முடியும், ஆனால் அது நீக்கிப்போட முடியாது."[22]

இந்தக் கொள்கையை நாம் நமது இருதயத்திற்கு எடுத்துச்செல்லுதல் மிகவும் முக்கியமானதாக உள்ளது. நம்மில் பலர் சட்டத்தின் வடிவமைப்பை விரும்புகிறோம். "சரியானது" எது மற்றும் "தவறானது" எது என்று அறிய நாம் விரும்புகிறோம். "சட்டங்கள்" எவை என அறிய நாம் விரும்புகிறோம். இதில் தவறு எதுவும் இல்லை ... ஆனால் ஒரு அபாயம் உள்ளது: மதம் என்பது சட்டத்தைக் கடைப்பிடித்தலைப் பற்றியது மாத்திரமே என்று நாம் முடிவுசெய்துவிடக்கூடும். என்னைத் தவறாக புரிந்துகொள்ள வேண்டாம். தேவனுடைய பிரமாணங்களை நம்மால் இயன்ற அளவு மிகச்சிறப்பாகக் கடைப்பிடித்தல் மிகமுக்கியமானதாக உள்ளது. யோவான், "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்

*திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை" என்று எழுதினார் (1 யோவான் 2:3, 4). அதே வேளையில், நாம் இரட்சிப்புக்குத் தகுதியாகும்படி அல்லது அதை ஈட்டக்கூடும்படி, "போதுமான அளவுக்கு நல்லவர்களாக" அல்லது "போதுமான அளவுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக" இருந் திருக்கிறோம் என்று நாம் ஒருக்காலும் நினைத்துவிடக்கூடாது. நாம் எவ்வளவுதான் கடினமாக முயற்சி செய்தாலும், பிரமாணங்களை நாம் பரிபூரணமாகக் கைக்கொள்ள இயலாது.*

*சற்று நேரத்திற்கு முன்பு, நாம் இரு விவரிப்புகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தோம் - அதில் ஒன்று, வேக வரையறைக்குக் கீழ்ப்படிதல் மீதானதும், இன்னொன்று கண்ணாடியில் பார்த்தல் பற்றியதுமானதாகும். நான் ஒரு கார் ஓட்டுவதற்கு எனது உரிமத்தைப் பெற்றுக்கொண்ட நாளில் இருந்து, வேகவரையறை விதிகளுக்குக் கீழ்ப்படியவே நான் முயற்சி செய்திருக்கிறேன். இருப்பினும் ஐம்பத்தி இரண்டு ஆண்டுகள் வாகனம் ஓட்டிய காலத்தில், மூன்றுமுறை அபராதச் சீட்டைப் பெற்றிருக்கிறேன். அதுபோலவே, நான் எனது முகத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள முயற்சிசெய்கிறேன்; ஆனால் அவ்வப்போது நான் கண்ணாடியில் பார்க்கையில் அதில் சில அழுக்குகளைக் கண்டறிகிறேன். தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி நம்மை நாம் ஒப்புக்கொடுத்திருந்த போதிலும், நாம் எப்போதுமே குறைவுபடுவோம். சிலர் சிறிய அளவு வீழ்ந்து போகலாம், மற்றவர்கள் மிக அதிகமாக வீழ்ந்து போகலாம். நாம் எல்லாருமே பிரமாணத்தை மீறுபவர்களாக இருக்கிறோம். பழைய பாடல் ஒன்று கூறுகிறபடி, "எனது கரத்தின் கிரியைகள் நியாயப்பிரமாணம் கேட்பவைகளை நிறைவேற்ற முடியாதே."[23]*

*விஷயம் இதுவாக இருந்தால், நமது இரட்சிப்பு என்பது பிரமாணத்தைப் பரிபூரணமாய்க் கடைப்பிடித்தல் என்பதைத் தவிர வேறு சிலவற்றின் அடிப்படையில் இருந்தாக வேண்டும். இது அவசர கேள்விகளில் விளைய வேண்டும். பிரமாணங்களைக் கைக்கொள்வதால் நாம் இரட்சிக்கப்படுவது இல்லையாதலால், நாம் இரட்சிக்கப்பட முடியுமா? நாம் எவ்வாறு இரட்சிக்கப்பட முடியும்? நமக்கு நம்பிக்கை எதுவும் உள்ளதா? இவ்வாறாகப் பவுல் தமது வாசகர்களின் மனங்களை "நீதிமான்களாக்கப்படுதல்" என்ற தமது கலந்துரையாடலுக்குத் தயார் செய்தார்.*

## முடிவுரை

*விசாரணை முடிந்துள்ளது. நீதிபதிக்கு முன்னால் பிரதிவாதி நிற்கிறார். அவர் பெருமிதமான குரலில், தீர்ப்பை அறிவிக்கிறார்: "குற்றம் சாட்டப்பட்டபடியே குற்றம் உள்ளது!" அதுவே பாவத்தின் மீதான "இறுதி தீர்ப்பாக" உள்ளது: "யூதர் கிரேக்கர் [நாம் உட்பட] யாவரும் பாவத்திற்குட்பட்டவர்கள்" (ரோமர் 3:9;* NIV)*! நாம் யாவரும் நமது பாவங்களில், இழந்துபோகப்பட்டுள்ள பாவிகளாயிருக்கிறோம்.*

*ஒரு மனிதர், ஒரு தோல்பையில் ஒரு சிறிய புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தைச் சுமந்தவராக, ஒரு சனிக்கிழமை பிற்பகல் வேளையில் ஒரு பூங்காவினூடே நடந்து கொண்டிருந்தார். இளைஞர்களின் குழுவொன்று, அந்தப் பையில் புகைப்படக்கருவி இருப்பதாக நினைத்துக்கொண்டு தங்களைப் படம்பிடிக்கும்படி அவரிடம் கேட்டுக்கொண்டனர். அதற்கு அவர், "என்னிடம் ஏற்கனவே உங்கள் படம் உள்ளது" என்றார். அவர்கள் இதற்கு முன்பு அவரை ஒருபோதும் சந்தித்திருக்கவில்லை, எனவே அவர்கள் அவரிடத்தில் அது எவ்வாறு சாத்தியம் என்று கேட்டனர். அவர் தமது புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தை வெளியே எடுத்து, ரோமர் 3:9-18ஐ வாசித்தார்.[24] நாம் விரும்பினாலும் இல்லை என்றாலும், அது கிறிஸ்து இல்லாத நமது ஆத்துமாவின் புகைப்படமாகவும் உள்ளது.*

*இந்தப்பாடத்தின் தலைப்பில், "இறுதித் தீர்ப்பு" என்பதற்குப்பின்பு ஒரு கேள்விக்குறி உள்ளது. இதை நான், பாவத்திற்கான "இறுதித் தீர்ப்பு" என்பது உங்கள் வாழ்வைப் பொறுத்தமட்டில், "இறுதித் தீர்ப்பாக" இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை வலியுறுத்துவதற்காகவே இவ்விடத்தில் இட்டேன். அடுத்தப்பகுதியானது "இப்படியிருக்க" (வசனம் 21) என்ற எதிர்மறை தொடர்சொல்லுடன் தொடங்குகிறது. ஏதோ பல விஷயங்கள் மாறவிருக்கின்றன. ரோமருக்கு எழுதிய நிருபம் என்பது, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு, நமக்காகத் தேவனும் கிறிஸ்துவும் என்ன செய்துள்ளனர் என்பதைப் பற்றி நமக்குக் கூறவுள்ளது. பவுல், "பாவத்தின் பிரச்சனையில் இருந்து இரட்சகரின் அளிப்பு என்பதற்கு மாற" தயாரானார்.[25] - எனவே இருளினால் மூழ்கடிக்கப்பட்டிருக்க வேண்டாம். ஒளி உதிர்க்க இருக்கிறது!*

*உங்களில் சிலர், கிறிஸ்து உங்களுக்காக என்ன செய்தார் என்பதையும் அவரது அன்பிற்குப் பதில்செயல் செய்வதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஏற்கனவே புரிந்துகொண்டிருக்கலாம் (யோவான் 14:15; மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:38). நீங்கள் புரிந்துகொண்டிருந்தால், உங்கள் மேட்டிமையைப் புறம்பே ஒதுக்கிப்போடுங்கள் - உங்கள் வாய் "அடைக்கப்படட்டும்" (ரோமர் 3:19) - அவரிடத்திற்கு இன்றே வாருங்கள் (மத்தேயு 11:28)!*

## பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் குறிப்புகள்

*நீங்கள் இந்தப்பாடத்தைப் பயன்படுத்தும்போது, உண்மை யற்றுப் போயுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் தவறான செய்கைக்கான சாக்குப்போக்குகளைப் புறம்பே போடும்படிக்கும் ("அவர்களின் வாய்களை அடைத்தல்") மறுபடியும் கட்டியெழுப்பப்படும்படிக்கும் (கலாத்தியர் 6:1; நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16) ஊக்கப்படுத்தவும் விரும்பலாம்.*

*இந்தப்பாடத்தை, (1) பவுலினால் மேற்கோள் காண்பிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளின் பின்னணியைத் தருதல் மற்றும் (2) மேற் கோள்களில் உள்ள உருவகத்தைப் பரிசீலனை செய்தல் ஆகிவற்றின்மூலம்*

*விரிவாக்க முடியும்.*

*அழுக்கு மற்றும் தண்ணீர் என்ற விவரிப்பு ஒரு பொருள் விளக்கப் பாடமாக முன்வைக்கப்பட முடியும்.*

---

*குறிப்புகள்*

[1]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 166. [2]*இந்த ஒத்ததன்மையானது கிரேக்க மொழியில் இன்னும் அதிகமாய் உச்சரிக்கப்படுகிறது. இவ்விரு கேள்விகளுமே ti ouv* ("what then") *என்று தொடங்குகின்றன.* [3]*சில எழுத்தாளர்கள், "நாங்கள்" என்பது, பவுல் தம்மைப்பற்றியும் பிற கிறிஸ்தவர்களைப்பற்றியும் பேசினார் என்று சுட்டிக்காண்பிக்கிறது என்று நம்புகின்றனர், ஆனால் சந்தர்ப்பப்பொருளானது, பவுல் தம்மை, சகயூதர்களுடன் அடையாளப்படுத்திக் கொண்டதற்கு ஆதரவாகவே உள்ளது (ரோமர் 9:3ஆவைக் காணவும்). எவ்வகையிலும், முடிவு ஒன்றாகவே நிலைத்துள்ளது: எல்லாரும் "பாவத்தின்கீழ்" இருக்கின்றனர்.* [4]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 10, 341. [5]John MacArthur *Romans 1-8,* The MacArthur New Testament Commentary (Chicago: Moody Press, 1991), 180. [6]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 77; Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 851. [7]*சிலர், ரோமர் 3:10, 11 வசனப்பகுதியானது மூன்றாவது ஆதாரமூலத்தில் - இருந்து - பிரசங்கி 7:20ல் இருந்து வருகிறது என்று நினைக்கின்றனர்.* [8]Alfred Edersheim, *The Life and Times of Jesus the Messiah,* new updated ed. (peabody, Mass.: Hendrickson Publishers, 1993), 311. [9]*சங்கீதம் 53:1-3 ஏறக்குறைய இதேபோன்றதாவே உள்ளது.* [10]*இந்தப்பத்தியில் சாய்வெழுத்துக்களில் உள்ள மூன்று சொற்றொடர்களும்* MacArthur, 181*ல் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளன.*

[11]*குழந்தைகள் மற்றும் குறைபாடுள்ள மனநிலை கொண்டவர்கள் போன்றவர்கள் மாத்திரமே கணக்கு ஒப்புவிக்கத்தேவையற்றவர்கள் என்ற விதிவிலக்குகளாக உள்ளனர்.* [12]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 56. [13]*சிலர், "நியாயப்பிரமாணம்" என்ற சொற்றொடர் தோராவை (பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களை) மாத்திரம் குறிக்கக்கூடும் என்று வலியுறுத்துகின்றனர்; ஆனால் நமது வேதவசனப்பகுதியில் பவுல், சங்கீதங்கள் மற்றும் ஏசாயாவின் புத்தகம் ஆகியவற்றில் இருந்து மேற்கோள் காண்பித்துவிட்டுப் பின்பு அவற்றை "நியாயப்பிரமாணம்" என்று குறிப்பிட்டார். "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தை தோராவைக் காட்டிலும் அதிகமானவற்றைக் குறிப்பிடக்கூடும்.* [14]*9ம் வசனத்தில் "கீழ்" என்ற வார்த்தையின் பயன்பாட்டைக் காணவும்.* [15]C. E. B. Cranfield, *Romans: A Shorter Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 67. [16]*"மாம்சம்"* (*sarx*) *என்பது பற்றி இவ்வரிசைத் தொடரின் பிற்பகுதியில் கலந்துரையாடப்படும். இவ்விடத்தில் இது "மனுஷன்"* [*"நபர்"*] *என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது.* [17]*இது "அறிவு" என்பதற்கான வழக்கமான வார்த்தை* (*gnosis*) *அல்ல, ஆனால் அதன் பலப்படுத்தப்பட்ட வடிவமாக* (*epignosis*) *உள்ளது, இது "முற்றிலும் நன்றாக அறிதல்" என்று அர்த்தப்படுகிறது மற்றும்*

இது "முன்னேற்றம் பெற்ற 'அறிவு' " என்ற கருத்தைத் தெரிவிக்கிறது (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 347). [18]எனது NASB வேதாகமப்பிரதியில் உள்ள ஒரு குறிப்பின்படி, நேரடியான அர்த்தத்தில், வசனம் 20ல் "நியாயப்பிரமாணத்தின்மூலம்" என்றே உள்ளது. [19]"தூக்குநூல்" என்பது ஒரு முனையில் எடையொன்றைக் கொண்டுள்ள நூல் ஆகும். அது ஒரு கட்டிடச்சுவரானது நேராக இருக்கிறதா இல்லையா என்று காண்பதற்காக அதற்கு முன்னால் தொங்கவிடப்படக்கூடியதாகும். [20]D. Martyn Lloyd-Jones, *Romans: The Righteous Judgment of God* (2:1-3:20) (Grand Rapids, Mich.: Ministry Resources Library, Zondervan Publishing House, 1989), 198.

[21]உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நடைமுறைப்படக்கூடிய உதாரணங்களைப் பயன்படுத்தவும். [22]Rogers, 58. [23]A. M. Toplady, "Rock of Ages," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [24]Adapted from MacArthur, 187, [25]Charles R. Swindoll, *Coming to Terms with Sin: A Study of Romans 1-5* (Anaheim, Calif.: Insight for Living, 1999), 44.